**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சாத்தூர்**

**முன்னிலை : திரு. சா. வரதராஜன், B.A.,B.L.,**
**நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்**
**2026 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 05 ஆம் நாள் புதன்கிழமை**
**ஆண்டு பட்டிகை வழக்கு எண் 172/2022**

*****

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண். (Name of the Police Station and Crime number of the Offence) | அரசுக்காக:– காவல் ஆய்வாளர், சாத்தூர் தாலுகா காவல் நிலையம். (குற்ற எண்.33/2022) |
| 2. | எதிரியின் பெயர் (Name) | திரு.சௌந்திரராஜன் (வயது 37/2026), த/பெ.பெருமாள்சாமி, 802/1, முத்துநகர், தெற்கு திட்டங்குளம், கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம். |
| 3. | எதிரியின் தந்தை பெயர் (Father's Name) | |
| 4. | எதிரியின் தொழில் (Occupation) | |
| 5. | எதிரியின் முகவரி (Residence) | |
| 6. | எதிரியின் வயது (Age) | |
| 7. | குற்ற நிகழ்வு நாள் (Occurrence) | 13.02.2022 |
| 8. | புகார் தேதி (Complaint) | 14.02.2022 |
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட தேதி (Apprehension) | 17.02.2022 |
| 10. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் (Release on Bail) | 17.02.2022 |
| 11. | Commitment | – |
| 12. | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி (Commencement of Trial) | 19.09.2022 |
| 13. | விசாரணை முடிக்கப்பட்ட தேதி (Closure of Trial) | 29.07.2026 |
| 14. | தண்டனை அல்லது உத்தரவு (Sentence or Order) | எதிரி விடுதலை செய்யப்படுகிறார். |
| 15. | தீர்ப்பின் நகல் வழங்குதல் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த முடிவு (Service of Copy of Judgment or finding on Accused) | எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச பிரிவுகள் 279, 304A இன் கீழான குற்றங்களுக்கு அவர் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, அவர் கு.வி.மு.ச பிரிவு 255(1) இன் கீழ் விடுதலை செய்யப்படுகிறார். |
| 16. | காலதாமதத்திற்கான காரணம் (Explanation of Delay) | சாட்சிகளை முன்னிலைப்படுத்துவதில் கால தாமதம் |

இவ்வழக்கானது என் முன்பு 29.07.2026 இன்று இறுதி விசாரணைக்காக வந்த போது, எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.மணிவண்ணன், B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், அரசு தரப்பில் குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதத்தை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....



S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.08.05 18:30:36 +0530

**தீர்ப்புரை**

1. **குற்றச்சாட்டு** :–

13.02.2022 ம் தேதி மதியம் சாத்தூர் அருகே உள்ள புல்வாய்ப்பட்டியில் உள்ள புகார்தாரரின் அத்தை மாரியம்மாளுக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தவரை பார்த்துவிட்டு வருவதற்கு அவரது மனைவி, வாதியின் மகன் கருப்பசாமி, மகள் விஜயலட்சுமி ஆகிய மூன்று பேர்களும் புல்வாய்ப்பட்டிக்கு சென்றதாகவும், புகார்தாரரின் மகன் புல்வாய்பட்டிற்கு சென்று அவனது பாட்டியை பார்க்க போவதற்கு அவனுக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் புறப்பட்டு புல்வாய்ப்பட்டிக்கு சென்று அவனது பாட்டியைப் பார்த்துவிட்டு திரும்ப வீட்டிற்கு போவதற்காக மாலை 18.00 மணிக்கு புகார்தாரரின் மகன் மாரீஸ்வரன் அவருக்கு சொந்தமான TN 69 V 7099 – Bajaj CT 100 இருசக்கர வாகனத்தில் உப்பத்தூர் மெயின் ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்து சாத்தூர் – கோவில்பட்டி NH – 44 கிழக்கு பக்க சாலையில் உப்பத்தூர் விலக்கில் இண்டிகேட்டர் லைட் போட்டு ரோட்டை கடக்க சென்ற போது அதே NH – 44 கிழக்கு பக்க சாலையில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த TN 96 B 0650 பதிவெண் கொண்ட INNOVA CRIYSTA காரினை எதிரி சௌந்திராஜன் என்பவர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டி வந்து மாரீஸ்வரன் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதியுள்ளார். விபத்தில் மாரீஸ்வரனுக்கு தலையின் இடது பக்கம் சிராய்ப்பு காயம், நெற்றியின் இடது பக்கம் சிராய்ப்பு காயம், இடது காலில் சிராய்ப்பு காயம், இடது கணுக்கால் அருகில் இரத்தகாயம், வலது கணுக்காலில் இடது கணுக்காலில் சிராய்ப்பு காயங்கள் ஏற்பட்டு சாத்தூர் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று மேல் சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று பின்பு மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சையில் இருந்த மாரீஸ்வரன் என்பவர் 16.02.2022 ம் தேதி பலதரப்பட்ட காயங்கள் மற்றும் அதன் பாதிப்பின் காரணமாக சிகிச்சை பலனளிக்காமல் இறந்துள்ளார். எனவே எதிரி அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மோதி மாரீஸ்வரன் இறப்பிற்கு காரணமான குற்றத்தை புரிந்துள்ளார் என்று எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 304A இன் கீழான குற்றங்களுக்கு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **கு.வி.மு.ச பிரிவு 207 ன் கீழ் நகல்** :–

இவ்வழக்கில், எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் அரசு தரப்பில் சமர்பிக்கப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207 இன் கீழ் அவருக்கு இலவசமாக வழங்கப்பட்டது.


S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.08.05 18:30:41 +0530

**3. <u>கு.வி.மு.ச பிரிவு 239 மற்றும் 240 ன் கீழ் விசாரணை</u> :–**

எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் இ.த.ச. பிரிவுகள் 279, 304A கீழான குற்றங்கள் இரண்டு ஆண்டுகள் வரை மட்டுமே தண்டனை விதிக்கத்தக்கதாகும். எனவே, எதிரிக்கு போதுமான கால அவகாசம் கொடுத்த பிறகு, அந்த குற்றங்களின் சாராம்சத்தை அவர் விளக்கி கேட்ட போது, அவர் பொய் வழக்கு என்றும், குற்றவாளி இல்லை என்றும், வழக்கு விசாரணை செய்யப்பட வேண்டும் என்றும் கூறினார். ஆகையால் இவ்வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4. <u>அரசு தரப்பு சாட்சிகள்</u> :–**

பட்டியல் சாட்சிகளில் இருந்து 3 நபர்களும், கூடுதல் சாட்சியாக சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.மூக்கையா அ.சா.1 முதல் அ.சா.4 வரை அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5. <u>அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கு</u> :–**

**5.1.** 13.02.2022ம் தேதி இவ்வழக்கின் நிகழ்நிலைப் புகார்தாரரின் மகனான, இவ்வழக்கு விபத்தில் இறந்த மாரீஸ்வரன், அவருக்கு சொந்தமான TN 69 V 7099 BAJAJ CT 100 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தில் புல்வாய்ப்பட்டியில் உள்ள அவரது பாட்டியை பார்த்துவிட்டு வீட்டுக்கு திரும்பும் போது, மாலை 18.00 மணிக்கு உப்பத்தூர் மெயின் ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்து சாத்தூர் – கோவில்பட்டி NH – 44 கிழக்கு பக்க சாலையில், உப்பத்தூர் விலக்கில், இண்டிகேட்டர் லைட் போட்டு ரோட்டை கடக்க சென்றார். அப்போது அதே NH – 44 கிழக்கு பக்க சாலையில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த TN 96 B 0650 பதிவெண் கொண்ட INNOVA CRIYSTA காரினை எதிரி சௌந்திராஜன் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டி வந்து மாரீஸ்வரன் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதினார்.

**5.2.** இந்த விபத்தில் மாரீஸ்வரனுக்கு தலையின் இடது பக்கம் சிராய்ப்பு காயம், நெற்றியின் இடது பக்கம் சிராய்ப்பு காயம், இடது காலில் சிராய்ப்பு காயம், இடது கணுக்கால் அருகில் இரத்தகாயம், வலது கணுக்காலில் இடது கணுக்காலில் சிராய்ப்பு காயங்கள் ஏற்பட்டு சாத்தூர் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று, மேல் சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். இவ்வழக்குச் சம்பவம் தொடர்பாக 14.02.2022 ஆம் தேதி 17.00 மணிக்கு மாரீஸ்வரனின் தந்தை சரவணன் என்பவர் சாத்தூர் தாலுகா காவல் நிலையத்திற்குச் சென்று, உதவி ஆய்வாளர் சதீஷ்குமாரிடம் புகார் மனு (அ.சா.ஆ.2) கொடுத்தார். அதன் அடிப்படையில் நிலைய குற்ற எண்



S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.08.05 18:30:44 +0530

33/2022–இல் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 279 மற்றும் 337 ஆகியவற்றின் கீழான குற்றங்களுக்கு முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.3) பதிவு செய்தார். அவர் சம்பவ இடத்திற்குச் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் (அ.சா.ஆ.4) மற்றும் மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.5) தயார் செய்தார்.

**5.3.** மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் உள்நோயாளியாக மாரீஸ்வரன் அனுமதிக்கப்பட்ட அவர் 16.02.2022 ம் தேதி சிகிச்சை பலனளிக்காமல் இறந்தார். மேற்படி இறப்பு தகவல் கிடைத்ததால், இவ்வழக்கின் சட்டப் பிரிவுகளைப் பிரிவுகள் 279, 304A I.P.C.–ன் கீழான குற்றங்களாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை (அ.சா.ஆ.6) தயார் செய்தார்.

**5.4.** வழக்கை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் ஆய்வாளர் செல்லப்பாண்டி, சாட்சிகளை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களைப் பதிவுசெய்தார். இறந்துபோன மாரீஸ்வரனின் உடல் மீது பிரேத விசாரணை செய்து அறிக்கை (அ.சா.ஆ.7) தயார் செய்தார். இவ்வழக்கில் விபத்துக்குள்ளான TN 69 V 7099 என்ற பதிவெண் கொண்ட Bajaj CT–100 இருசக்கர வாகனத்தையும் மற்றும் விபத்துக்கு காரணமான TN 96 B 0650 பதிவு எண் கொண்ட நான்கு சக்கர வாகனத்தையும் மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வுக்கு அனுப்பிவைத்து, அவருடைய ஆய்வறிக்கைகளை (அ.சா.ஆ.8 மற்றும் 9) பெற்று, அவருடைய வாக்குமூலத்தையும் பதிவுசெய்தார்.

**5.5.** இவ்வழக்கு விபத்தில் இறந்த மாரீஸ்வரன் என்பவருக்கு முதல் உதவி சிகிச்சை அளித்த சாத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.ஜெகநாத் என்பவரை விசாரித்து அவர் வழங்கிய விபத்து பதிவேட்டை (அ.சா.ஆ.10) பெற்று, அவருடைய வாக்குமூலத்தை பதிவு செய்தார். இறந்த மாரீஸ்வரனுக்கு மேல் சிகிச்சை அளித்த விருதுநகர் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.நியாஷ்சுதின் என்பவரை விசாரித்து, அவர் வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றை (அ.சா.ஆ.11) பெற்று, அவருடைய வாக்குமூலத்தையும் பதிவு செய்தார்.

**5.6.** இறந்த மாரீஸ்வரனின் பிரேதத்தினை பிரேதபரிசோதனை மேற்கொண்ட மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை மருத்துவர் திருமதி.ரமா என்பவரை விசாரித்து அவரிடமிருந்து பிரேத பரிசோதனை அறிக்கை (அ.சா.ஆ.12) பெற்று, அவருடைய வாக்குமூலத்தையும் பதிவு செய்தார். முதல் நிலை காவலர்கள் செல்லமுனியாண்டி மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, முதல் விசாரணை செய்த உதவி ஆய்வாளர் சதீஸ்குமார் ஆகியோர்களை விசாரித்து, அவர்களது வாக்குமூலத்தையும் பதிவு செய்தார்.

S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.08.05 18:30:48 +0530

**5.7.** அவருடைய விசாரணையிலிருந்தும், சாட்சிகளின் விசாரணையிலிருந்தும் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 279, 304(A)–ன் கீழான குற்றங்களுக்கு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**6. <u>கு.வி.மு.ச பிரிவு 313 (1)(ஆ) கீழ் விசாரணை</u> :–**

மேற்கண்ட அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றக்கூடிய சாட்சியங்களையும், சூழ்நிலைகளையும் கு.வி.மு.ச பிரிவு 313 (1)(ஆ) இன் கீழ் தொகுத்து, அவரிடம் விளக்கி கேட்ட போது, அவர் பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும் மறுத்தார்.

**7. <u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை</u> :–**

எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச பிரிவுகள் 279, 304A இன் கீழான குற்றச்சாட்டுக்கள் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா?

**8. <u>சாட்சியங்கள் மதிப்பீடு</u> :–**

**8.1.** இவ்வழக்கில் மொத்தம் 19 நபர்கள் சாட்சிகளாக இறுதி அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் அவர்களில் அரசு தரப்பு சாட்சிகள் 1, 2 மற்றும் 4 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ள, ஊர்த்தேவன் மட்டும் தான் வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியாக புலன் விசாரணை அதிகாரிகளால் விசாரணை செய்யப்பட்டு, நீதிமன்றத்திலும் விசாரணை செய்யப்பட்டுள்ளார். மற்ற சாட்சிகள் வழக்குச் சம்பவம் குறித்துக் கேள்விப்பட்ட சாட்சிகளாகவும், அலுவல் சாட்சிகளாகவும் இருக்கிறார்கள். அலுவல் ஆவணங்களான பிரேத விசாரணை அறிக்கை (அ.சாஆ.7), விபத்து பதிவேடு (அ.சா.ஆ.10 மற்றும் 11), மோட்டார் வாகன ஆய்வறிக்கை (அ.சா.ஆ.8 மற்றும் 9), பிரேத பரிசோதனை அறிக்கை (அ.சா.ஆ.12) ஆகியவற்றைச் சான்றாவணங்களாகக் குறியீடு செய்ய அரசு தரப்பில் கு.வி.மு.ச. பிரிவு 294–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு, எதிரி தரப்பில் ஆட்சேபனை இல்லை என்று கூறப்பட்டதன் அடிப்படையில் அனுமதிக்கப்பட்டது. எனவே, அலுவல் சாட்சிகள் யாரும் இவ்வழக்கில் சாட்சிகளாக விசாரணை செய்யப்படவில்லை; ஆனால், அவர்கள் வழங்கிய ஆவணங்கள் எதிரி தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுச் சான்றாவணங்களாகக் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**8.2.** இந்த வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்ததாக கூறப்பட்ட ஒரே சாட்சியான அ.சா.1 – ஊர்த்தேவன் தன்னுடைய சாட்சியத்தில், அவருக்கு இந்த வழக்கு சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது என்றும், அவரை போலீசார் விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இந்த வழக்கில் முதல் தகவல் அளித்த, இறந்து போனவரின் தந்தை சரவணன் வழக்கு சம்பவத்திற்கு முன்பு இறந்து விட்டதால் அவர் அரசு தரப்பு சாட்சியாக விசாரணை செய்யப்படவில்லை.



S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.08.05 18:30:51 +0530

**8.3.** அ.சா.4 – கருப்பசாமி அவருடைய சாட்சியத்தில், இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் தன்னுடைய அப்பா என்றும்; அவர் உடல்நலக்குறைவால் ஓராண்டுக்கு முன் இறந்துவிட்டார் என்றும்; இவ்வழக்கில் இறந்து போன மாரீஸ்வரன் தன்னுடைய உடன்பிறந்த தம்பி என்றும்; அவர் கொத்தானார் வேலை செய்து வந்தார் என்றும்; வழக்கமாக இரவு 09.00 மணிக்கு வேலையை முடித்துவிட்டு வீட்டுக்கு வருவார், ஆனால் 13.02.2022ம் தேதி தன்னுடைய தம்பி வேலையை முடித்து வீட்டிற்கு வரவில்லை என்பதால் அவரை தேடி தான் உப்பத்தூர் விலக்கிற்கு வந்ததாகவும் கூறியுள்ளார். மேலும், அப்போது அங்கிருந்த ரோந்து போலீசாரிடம் கேட்டபோது தன்னுடைய தம்பிக்கு உப்பத்தூர் விலக்கில் வைத்து இன்னோவா கார் மோதி விபத்து ஏற்பட்டதாகவும், தன்னுடைய தம்பியை அவசர ஊர்தி வாகனம் மூலம் சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாக கூறியதாகவும்; தன்னுடைய உறவினர்களுடன் சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது, தன்னுடைய தம்பியை மேல் சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்திருந்தார்கள் என்றும்; அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும்; அங்கு இரண்டு நாட்கள் சிகிச்சையிலிருந்த தன்னுடைய தம்பி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்றும் கூறியுள்ளார். தன்னுடைய தம்பிக்கு ஏற்பட்ட விபத்து தொடர்பாக தன்னுடைய அப்பா புகார் கொடுத்துள்ளார் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள சரவணன் என்ற கையெழுத்து தன்னுடைய அப்பாவின் கையெழுத்தாகும் என்று அ.சா.4 – கருப்பசாமி சாட்சியமளித்துள்ளார்.

**8.4.** மேற்கண்ட அரசு தரப்பு சாட்சிகள் அ.சா.1 மற்றும் அ.சா.4 இருவரும் தங்களது முந்தைய போலீஸ் வாக்குமூலத்திலிருந்து முற்றிலும் முரண்பட்டுச் சாட்சியமளித்ததால், அரசு தரப்பில் அவர்கள் இருவரும் பிறழ் சாட்சிகளாக அறிவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டனர். எனினும், எதிரியைக் காப்பாற்றுவதற்காக அவர்கள் பொய் சாட்சி சொல்கிறார்கள் என்பதை நிரூபிக்கும் வகையில் அரசு தரப்பால் அவர்களிடம் இருந்து எவ்வித சாதகமான பொருண்மைகளையும் குறுக்கு விசாரணையின் போது வெளிக்கொணர இயலவில்லை.

**8.5.** மேலும், சம்பவ இடத்தின் தன்மை மற்றும் குற்றச்சாட்டை உறுதிப்படுத்த வேண்டிய பார்வை மகஜர் (அ.சா.ஆ.5) சாட்சியாக குறிப்பிடப்பட்ட அ.சா.2 – இன்னாசிமுத்து அவர் 3 ஆண்டுக்கு முன் கடவுச்சீட்டு பெற ஆவணங்களை சரிப்பார்க்க காவல்நிலையத்திற்கு சென்றதாகவும், அந்த சமயத்தில் போலீசார் தன்னிடம் பார்வை மகஜரில் கையொப்பம் செய்ததாகவும், அதில் எழுதப்பட்ட விபரம் பற்றி தனக்கு தெரியாது என்றும் கூறி, அரசு தரப்பு வழக்குக்கு முற்றிலும் முரணாகவே சாட்சியமளித்துள்ளார். அவர் அரசு தரப்பில் பிறழ்



S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.08.05 18:30:56 +0530

சாட்சியாகக் குறுக்கு விசாரணை செய்தபோதிலும், அரசு தரப்பு வழக்குக்கு ஆதரவான எவ்வித தகவல்களும் பெறப்படவில்லை.

**8.6.** இதற்கிடையில், அலுவல் சார்ந்த ஆவணங்களான பிரேத விசாரணை அறிக்கை (அ.சாஆ.7), விபத்து பதிவேடு (அ.சா.ஆ.10 மற்றும் 11), மோட்டார் வாகன ஆய்வறிக்கை (அ.சா.ஆ.8 மற்றும் 9), பிரேத பரிசோதனை அறிக்கை (அ.சா.ஆ.12) ஆகியவற்றைச் ஆவணங்களாகக் குறியீடு செய்வதற்குத் தங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்று எதிரி தரப்பில் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 294–இன் கீழ் அரசு தாக்கல் செய்த மனுவில் ஒப்புக்கொள்ளப்பட்டது. இதன் காரணமாக, அது தொடர்பான இதர அரசு மற்றும் மருத்துவச் சாட்சிகள் விசாரிக்கப்படாமல் விடுவிக்கப்பட்டனர்.

**8.7.** தொடர்ந்து, புலன் விசாரணை தொடர்பான விபரங்களை கூடுதல் சாட்சியான சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.3 – மூக்கையா ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார். எனவே, அவரது சாட்சியத்தை மட்டுமே கொண்டு எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை தீர்மானிக்க இயலாது.

**8.8.** நேரில் பார்த்த சாட்சி மற்றும் மகஜர் சாட்சி அனைவரும் பிறழ்ந்துவிட்டதாலும், அரசு தரப்பு சமர்ப்பித்த சாட்சியத்தின் மூலம் எதிரிதான் வாகனத்தை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும், அசட்டுத் துணிச்சலுடனும் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்பதை நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கத் தவறிவிட்டதாலும், எதிரிக்குச் சந்தேகத்தின் பலன் கிடைக்கக்கூடியது இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**9.** <u>முடிவு:–</u>

**9.1.** முடிவில், எதிரி இ.த.ச பிரிவுகள் 279, 304A ஆகிய குற்றங்களுக்கு குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, அவர் கு.வி.மு.ச பிரிவு 255(1) இன் கீழ் விடுதலை செய்யப்படுகிறார்.

**9.2.** இவ்வழக்கில் எதிரி ஆஜராக எழுதிக் கொடுத்த பிணை ஆவணம் இரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

**9.3.** சொத்து பொருள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

இத்தீர்ப்புரை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 05.08.2026 ஆம் தேதி திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.08.05 18:30:59 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
சாத்தூர்

**பிற்சேர்க்கை**

**1. அரசு தரப்பு சாட்சிகள் :–**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.ஊர்த்தேவன் |
| அ.சா.2 | திரு.இன்னாசி முத்து |
| அ.சா.3 | திரு.மூக்கையா (சிறப்பு உதவி ஆய்வாளர்) |
| அ.சா.4 | திரு.கருப்பசாமி |

**2. அரசு தரப்பு சான்றாவணங்கள் :–**

| வரிசை எண் | தேதி | ஆவண விபரம் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 14.02.2022 | பார்வை மகஜரில் உள்ள அ.சா.2 கையோப்பம் |
| அ.சா.ஆ.2 | 14.02.2022 | புகார் மனு |
| அ.சா.ஆ.3 | 14.02.2022 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 14.02.2022 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | 14.02.2022 | மாதிரி வரைப்படம் |
| அ.சா.ஆ.6 | 16.02.2022 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |
| அ.சா.ஆ.7 | 16.02.2022 | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ 8 | 13.02.2022 | TN 69 V 7099 Bajaj CT – 100 இருசக்கர வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.9 | 13.02.2022 | TN 96 B 0650 பதிவெண் கொண்ட நான்கு சக்கர வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.10 | 13.02.2022 | சாத்தூர் அரசு மருத்துவமனை வழங்கிய விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.11 | 13.02.2022 | விருதுநகர் அரசு மருத்துவமனை வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று |
| அ.சா.ஆ.12 | 16.02.2022 | பிரேத பரிசோதனை அறிக்கை |
| அ.சா.ஆ.13 | 14.02.2022 | புகார் மனுவில் சரவணன் கையெழுத்து |

**3. அரசு தரப்பு சான்று பொருள்** :– இல்லை

**4. எதிரி தரப்பு சாட்சிகள்** :– இல்லை

**5. எதிரி தரப்பு சான்றாவணங்கள்** :– இல்லை

**6. எதிரி தரப்பு சான்று பொருட்கள்** :– இல்லை

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.08.05 18:31:05 +0530

**நீதித்துறை நடுவர் எண்.II,**
**சாத்தூர்**

குறிப்பு :–

1. விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்தார்கள்.
2. சாட்சிகள் 3 வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு விபரம் காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.